**தலைப்பு 430 - காணி முகாமைத்துவ நடவடிக்கைகள், அரசாங்க தொழில்முயற்சி காணிகள் மற்றும் சொத்துக்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

காணி முகாமைத்துவ நடவடிக்கைகள், அரசாங்க தொழில்முயற்சிகள் காணிகள் மற்றும் சொத்துக்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் காணி முகாமைத்துவ நடவடிக்கைகள், அரசாங்க தொழில்முயற்சிகள் காணிகள் மற்றும் சொத்துக்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூலை 27 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஆகஸ்ட் 09 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு ஒரு அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

காணி முகாமைத்துவ நடவடிக்கைகள், அரசாங்க தொழில்முயற்சிகள் காணிகள் மற்றும் சொத்துக்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சானது 2020 செப்தெம்பர் 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டதனால் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| காணி அமைச்சிற்குச் சொந்தமான 12 வாகனங்கள் இந்த அமைச்சின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்தும் அவற்றின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 2021 பெப்ரவரி மாதம் அவற்றில் 05 வாகனங்கள் மீண்டும் காணி அமைச்சிற்கும் 7 வாகனங்கள் உள்ளூராட்சி மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிற்கும் ஒப்படைக்கப்பட்டிருந்தது. | உங்களின் அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | இராஜாங்க அமைச்சிற்குச் சொந்தமான வாகனங்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப் படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) இராஜாங்க அமைச்சின் 01 மற்றும் 02 செயற்திட்டங்கள் தொடர்பாக 19 மீண்டுவரும் செலவு விடயங்களின் ரூபா 25,298,106 மொத்த தொகையான சேமிப்புக்கள் 9 மூலதன செலவு விடயங்களின் ரூபா 2,806,752 மொத்த தொகையான சேமிப்புக்களும் காணப்பட்டன. இச் சேமிப்புக்களின் தேறிய நிதி ஏற்பாட்டில் 10 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டமை மேலும் அவதானிக்கப்பட்டது. | உங்களின் அவதானிப்புக்கள் சரியானது. அமைச்சானது 2020 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய 2187/27 ஆம் இலக்க வர்த்தமானியின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் 2020 செப்தெம்பர் 04 ஆந் திகதி பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். அதுவரை அமைச்சின் கடமைகளை தெளிவுபடுத்திக் கொள்வதற்கும் விடயத்தை ஒதுக்கீடு செய்தல் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை இனங்கண்டு முடிவுறுத்துவதற்கும் முடியாததனால் காணி அமைச்சானது திறைசேரியுடன் | ஆண்டிற்காக செலவு செய்வதற்கு வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளை குறிக்கோளிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்று வதற்காக சிக்கனமாக செலவு செய்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | கலந்துரையாடி அண்ணளவாக நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்திருந்தது. அதன் காரணமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. | |
| (ஆ) | ஒரு மீண்டுவரும் செலவு விடயத்திற்கும் 02 மூலதன செலவு விடயங்களுக்குமாக நி.பி 66 இன் கீழ் ஏனைய செலவு விடயங்களிலிருந்து மாற்றப்பட்டிருந்த ரூபா 1,050,000 மொத்த தொகையான நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 222,331 தொகை அல்லது 21 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | அமைச்சு பதவியணியில் போக்குவரத்து படியினைப் பெற்றுக் கொண்டிருந்த ஊடக செயலாளர் திசெம்பர் மாத மத்தியில் இராஜினாமா செய்தல், புதிய அமைச்சின் பிரிவுகளை ஒதுக்கீடு செய்வதற்காக நி.பி 66 இன் கீழ் நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக் கொள்ளும் போது தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு வேண்டுதல் விக்கப்பட்டிருந்தும் கொவிட் இன்னல் நிலைமயின் அடிப்படையில் செயற்பாடுகளை முடிவுறுத்தி ஆண்டின் நடுப்பகுதியில் கொடுப்பனவு செய்யும் போது நிறைவேற்றிய செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட இறுதி விலைப் பட்டியலின் மீதும் கொடுப்பனவு செய்தல், கொவிட் இன்னல் நிலைமைக்கு மத்தியில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி யிருந்தமையால் முழு நிதி ஏற்பாட்டில் 1 சதவீதம் அளவில் சேமித்தல் ஆகிய விடயங்கள் இச்சேமிப்புக்களுக்கு காரணமாக இருந்தன. | ஆண்டிற்காகச் செலவு செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டிற்கு மேலதிகமாக ஏனைய செலவு விடயங் களிலிருந்தும் குறிக்கோளிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்று வதற்காகச் செய்யப்பட்ட மாற்றங்களை சிக்கனமாகச் செலவு செய்தல் வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாட்டினை மிகைத்து 03 மீண்டுவரும் செலவு விடயங்கள் தொடர்பாக ரூபா 155,416 தொகையான பொறுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | 2020 ஆம் ஆண்டில் அனைத்து செயற்பாடுகளும் 04 மாதங்கள் ஆகிய குறுகிய காலத்தில் நிறைவேற்றும் போது கொடுப்பனவு வவுச்சர்கள் அந்த அந்த மாதத்தில் சமர்ப்பிக்கப்படாததுடன் பல வவுச்சர்கள் 2020 திசெம்பர் மாத இறுதியின் சில தினங்களில் சமர்ப்பித்ததன் காரணமாக அந்த செலவு விடயங்களின் நிதி ஏற்பாட்டுத் தேவைப்பாட்டினை முன்பே ஊகித்துக் கொள்ளல் சிக்கலானதாகும். 2021 பெப்ரவரி 16 ஆந் திகதி இந்த அமைச்சின் கடமைகள் காணி அமைச்சுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டதோடு அதுவரை அனைத்து பொறுப்புக்களையும் செலுத்தி 2021 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவுறுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டதனால் 2020 ஆம் ஆண்டில் மீண்டுவரும் செலவு விடயங்களின் சேமிப்புக்களை மிகைக்காத வகையில் செலவு செய்து முடிவுறுத்தப்பட்டுள்ளது. | அங்கீகரித்த நிதி ஏற்பாட்டு எல்லையினை மிகைத்து பொறுப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காதிருத்தல் வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தூரநோக்கும் செயற்பணியும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 2187/27 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் மூலம் தோற்றுவிக்கப்பட்டுள்ள இந்த இராஜாங்க அமைச்சானது 2021 பெப்ரவரி 16 ஆந் திகதிய 2215/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் இல்லாதொழிக்கப்பட்டிருந்ததனால் அக்காலத்தின் போது ரூபா 26,118,666 தொகை செலவு செய்யப்பட்டிருந்தும் அமைச்சின் தூரநோக்கு மற்றும் செயற்பணிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு முடியாதிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | உங்களின் அவதானிப்புடன் இணங்குகின்றேன். | இராஜாங்க அமைச்சின் குறிக்கோளிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்று வதற்காக இலக்கிடப்பட்ட தூரநோக்கு மற்றும் செயற்பணிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |